# வேள்பாரி நாவல் காட்டும் பறம்பு மக்களின் வாழ்வியல்

**பொன்.கனகா,**
**பதிவு எண்: 21212014022010, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம்,**
**ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி - 628 002,**
**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்றது, அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி-12.**
**முனைவர்.ர.செல்வலதா,**
**நெறியாளர் & உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை & தமிழாய்வு மையம்,**
**ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி - 628 002.**

**42**

**ஆய்வுச் சுருக்கம்:**

இக்கட்டுரையில், சாகித்திய அகாடெமி எழுத்தாளர் சு.வெங்கசேன் எழுதிய "வீரயுக நாயகன் வேள்பாரி" எனும் நாவல் வெளிப்படுத்தக்கூடிய, பறம்பு மக்களின் வாழ்வியல் ஆராயப்பட்டுள்ளது. எது பறம்பு நாடு என்றும், யார் பறம்பு மக்கள் என்றும் கூறி அவர்களின் வாழ்வியல் விளக்கப்பட்டுள்ளது. அவர்கள் வாழ்க்கையில், இயற்கை பெற்றிருந்த முக்கியத்துவம் ஆராயப்பட்டுள்ளது. பறம்பு நாட்டினை ஆட்சி செய்தவன் யார் என்பதும், அவனது ஆட்சிமுறை எப்படி அமைந்திருந்தது என்பதும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. புறவாழ்வியல் கூறான மறத்தில், அறநெறி வழுவாமல் வாழ்ந்த வாழ்க்கைமுறை ஆராயப்பட்டுள்ளது. மரபுகளைப் போற்றிப் பின்பற்றும் மாண்பு வேளிர்குலத்தில் எவ்வாறு காணப்படுகிறது என்பதும், அவர்களது வாழ்க்கையில் அன்பு எத்தகைய நிலையில் இடம்பெற்றிருந்தது என்பதும் விளக்கப்பட்டுள்ளது. ஆராயப்பட்டு கண்டெடுக்கப்பட்ட உண்மைகள் அனைத்தும் தொகுப்புரையில் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்பின் முடிவுரையும், பிற இலக்கியங்களில் இருந்து கையாளப்பட்ட மேற்கோள்களின் விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:**

பறம்புமலை, வேளிர்குலம்,வாழ்வியல், இயற்கை, ஆட்சி, வீரம், மரபு, அன்பு.

**முன்னுரை:**

சமுதாயத்தில் படைக்கப்படும் இலக்கியங்கள் அனைத்தும் தாம் வாழ்ந்த சமூகத்தின் வாழ்வியலைப் பிரதிபலிக்கின்ற பிம்பங்களாக அமைகின்றன. எனவேதான் அவற்றைக் காலத்தின் குரலாகவும், வரலாற்றின் சாரமாகவும் ஏற்றுக்கொள்கிறோம். அவ்வகையில் வேள்பாரி நாவல் வெளிப்படுத்துகின்ற பறம்பு மக்களின் வாழ்வியலை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**வேள்பாரி நாவல்- வாழ்வியல்:**

ஒரு குறிப்பிட்ட மனிதர்களின்(அ)உயிரினங்களின் வாழ்க்கை முறையான, அன்றாட நடைமுறைகள், செயல்பாடுகள், பண்பாடு, பழக்கவழக்கங்கள், பொருளாதாரம் முதலானவை எவ்வாறு இருந்தன என்பதை எடுத்தியம்புவது வாழ்வியல் எனலாம்.

வீரயுக நாயகன் வேள்பாரி எனும் நாவல், சாகித்திய அகாடெமி எழுத்தாளர் சு.வெங்கடேசன் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. இந்நாவல், கடையெழு வள்ளல்களுள் ஒருவராகப்

போற்றப்படும் பாரியையும் , அவன் ஆட்சிசெய்த பறம்பு மலை மக்களின் வாழ்க்கையையும் எடுத்தியம்புவதாக அமைந்துள்ளது.

**பறம்பு நாடு? பறம்பு மக்கள்? :**

வேந்தர்களின் தலைமையேற்காத இருபதுக்கும் மேற்பட்ட குலத்தலைவர்கள் , இனக்குழுக்களாக மலையும் காடும் சார்ந்த நிலப்பகுதியில் வாழ்ந்தனர். அவ்வாறு மேற்குத் தொடர்ச்சி மலையில் வாழ்ந்த பதினாறு( 16) இனக்குழுக்களுக்குத் தலைமையாக வேளிர்குலம் விளங்கியது. அம்மலையின் ஒரு பகுதியே பறம்பு மலை. பறம்பு மலை என்பது , தற்பொழுதைய நீலகிரி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகள் சார்ந்த இடமாக இருந்துள்ளது.

பறம்பு மலையில், வேளிர்குலம் மட்டுமல்லாது வேறு குலத்தவரும் வாழ்ந்துள்ளனர். மூவேந்தர்களின் சூழ்ச்சிகளால் அழிக்கப்பட்டு , அவகதிக்கு ஆளாக்கப்பட்ட பதினாறு குலங்களின் வழித்தோன்றல்களுக்கும், பாரி வாழ வழிவகுத்துத் தந்தமையை , "மூவேந்தர்களால் அழிக்கப்பட்ட பதினாறு குலங்களின் மிச்சங்கள் , இப்போதும் பறம்பு நாட்டில் வசிக்கின்றன " (வே.பா.நா.ப.142) என்று நாவலில் வெளிப்படும் பாரியின் கூற்று மூலம் அறிய முடிகின்றது.

**இயற்கைசார் இன்பவாழ்வு:**

அரிய பெரிய கோட்டைகளையும் , மதில்களையும், அகழிகளையும் அமைத்து , தங்களைக் காத்துக் கொள்ள வேந்தர்கள் அரண் அமைத்தனர். ஆனால் பறம்பு மக்கள் , இயற்கையையே அரணாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர். இதனை , "நாங்கள் காட்டு உயிரினங்கள் நுகரவும் நெருங்கவும் முடியாத தாவரங்களைக் கொண்டு , ஒரு பெருவேலி அமைத்துள்ளோம். தலைமுறை தலைமுறையாக எங்கள் தாவரஅறிவின் சேகரம் , இந்த நாகப்பச்சை வேலிதான் " (வே.பா.நா.பக்.130,131) என்ற நாவல் வரிகள் விளக்குகின்றன. இயற்கையை மிஞ்சிய பாதுகாப்பு எதுவுமில்லை என்ற உண்மையை பறம்பு நாட்டின் அமைப்பு நமக்கு எடுத்தியம்புகின்றது.

பறம்பு மக்கள் ஆசையின் பொருட்டு , சேமித்துச் சேமித்து சாகாமல் , தேவைகளுக்கு மட்டுமே உழைத்தனர். தேவை மட்டுமே அங்கு ஆசையாக இருந்தது. இருப்பதை வைத்து இன்பமாக வாழ்ந்துள்ளனர். இதனை, "ஒவ்வொருவருக்கு எனத் தனித்த சொத்தும் , எப்பாடுபட்டாயினும் அதை சேமித்துப் பெருக்க வேண்டும் என்ற பெருந்தாகமும் இங்கு இல்லை " (வே.பா.நா.ப.97) என்ற நாவல் வரிகள் உறுதிப்படுத்துகின்றன.

பறம்பு மக்கள் இயற்கையின் பின்னால் ஓடியாடிக் களித்து வாழ்ந்துள்ளனர். ஆனால் , பணம், பொருள், சொத்து சேர்க்க வேண்டுமென பொருளாதரத்தின் பின்னால் நாம் ஓடிக்கொண்டிருக்கிறோம். பறம்பு நாட்டில் வணிகம் , இன்றைய நிலைக்கு மாறுபட்டுப் பார்க்கப்பட்டதை, "இயற்கை வழங்குகிறது. நாம் வாழ்கிறோம். இடையில் விற்கவும் வாங்கவும் நாம் யார்?" (வே.பா.நா.ப.114) என்ற வரிகளின் மூலம் அறியமுடிகிறது.

**"பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்"1**

என்கிறது பழமொழி. ஆனால், பறம்பு மக்கள் இதற்கு விதிவிலக்காக , பணத்தையே பிணமாகக் கருதி வாழ்ந்துள்ளனர் என்பது, மேற்கண்ட நாவல் வரிகள் மூலமாக அறியமுடிகின்றது.

பறம்பு நாட்டில் , ஆபத்து ஏதேனும் வந்தால் போரிடும் ஆயுதங்களாகவும் , காக்கும் மருத்துவக் கவசங்களாகவும் இயற்கையின் ஆற்றல்களைப் பயன்படுத்தினர். இதற்குச் சான்றாக , "வாள்முனை நெஞ்சைக் கீறினாலும் கவலை கொள்ளும் வீரன் எவனும் இல்லை. அத்தாப்பொறுத்தி மூலிகையைக் கண்டறிந்த பிறகு, சதையை அறுத்துக் கொண்டு போனாலும், அறுத்ததைப் பொருத்திக் கொடுக்கிறான் மருத்துவன்" (வே.பா.நா.ப.97) என்ற நாவல் வரிகள் அமைகின்றது.

இன்று உலக நாடுகள், மிகவும் ஆபத்தான அணுஆயுதங்களை உருவாக்கிப் போரிட்டு, கொன்று குவித்து , பின்பு அவை ஏற்படுத்தும் நச்சுக்களால் , உயிர் வாழத் தினந்தினம் போராடிக் கொண்டிருக்கிறோம். ஆனால் பறம்பு மக்கள் , ஆபத்து வந்தால் தம்மைக் காப்பதற்காக மட்டுமே எதிர்த்துப் போராடியுள்ளனர். இவ்வாறு, பண்டைய மக்களின் புறவாழ்வியல் கூறுகளான அரண் , ஆயுதம், மருத்துவம், வணிகம் முதலான அனைத்தும் பறம்புநாட்டில் இயற்கையோடு இயைந்து , இயற்கைசார் வாழ்க்கையாகவே அமைந்துள்ளதை நாவல்மூலம் அறிய முடிகின்றது.

**விதிகளற்ற வியத்தகு ஆட்சி:**

அரசாட்சி, குடியாட்சி, சனநாயக ஆட்சி என்று பல்நெடுங்காலந்தொட்டே , பல்வேறு ஆட்சிமுறைகளால், ஆட்சியாளர்களால் மக்கள் ஆளப்பட்டு வருகின்றனர். பறம்பு மலையினை ஆட்சிசெய்தவன் பாரி என்றும் , இவன் வேளிர்குலத்தின் நாற்பத்திரண்டாவது( 42) குலத்தலைவன் என்றும் நாவல் எடுத்துரைக்கின்றது.

"முரசு கடிப்பு இகுப்பவும்,வால் வளை துவைப்பவும்
அரசுடன் பொருத அண்ணல் நெடு வரை,
கறங்கு வெள்ளருவி கல்லலைத்து ஒழுகும்
பறம்பின் கோமான் பாரியும்"2

என்ற புறநானூற்றுப் பாடலில் பெருஞ்சித்திரனார் , குமணனுக்கு முன் மாண்டு போன கடையெழு வள்ளல்களைக் குறிப்பிடுகையில், பாரியை முதலாவதாகக் குறிப்பிட்டுள்ளார். சங்கும், முரசும் முழங்க முற்றுகையிட்ட அரசர்களோடு போரிட்ட பறம்பு மலையின் அரசன் பாரி என்று குறிப்பிட்டுள்ளார்.

சங்க காலத்தில் இருந்த அரசாட்சி முறையானது அதிகாரத்தை மையமிட்டதாக விளங்கியது. ஆனால் , பறம்பு நாட்டின் ஆட்சிமுறை அதற்கு விதிவிலக்கு எனலாம். அதிகாரம் உயிர்பெறாத இடத்தில் அன்பு மட்டு ;மே தழைத்திருக்கும். எல்லாமே அன்பு மயமாகத் திகழும் ஓர் உலகமாகப் பறம்பு விளங்கியது. அங்கு விதிகளும் இல்லை. தண்டனைகளும் இல்லை. தலைவன் முதல் கடைநிலை வீரன் வரை , அனைவரும் சரிநிகர் சமானமாகப் பார்க்கப்பட்டனர். இதனை , "நாடென்பது அரசும் , அரச நியதியும்தான் என்று விதி செய்பவர்களுக்கு மத்தியில் , நாடென்பது அரசற்ற மக்களின் ஆதிநிலம் எனப் பாரி நிலைநிறுத்தியுள்ளான் " (வே.பா.நா.ப.95) என்ற நாவல் வரிகள் உறுதிப்படுத்துகின்றன.

**"சமூகச் சமநிலையை நிலைநாட்டும் பொருட்டுப் பெரும்பாலான சமுதாயங்கள் அவற்றிற்கு ஏற்புடைய அரசியல் அதிகார முறையைச் செயல்படுத்துகின்றன "3** என்று குறிப்பிடுகின்றார் பக்தவச்சல பாரதி.

"அவனோடு(பாரியோடு) அமர்ந்து கள் அருந்தும் நாள்தான் வாழ்வின் திருநாள் " (வே.பா.நா.ப.38) என்று பறம்பின் கடைநிலை வீரன் கூறுகின்றான். "உனக்குக் கள் ஊற்றிக் கொடுக்கும் இந்த நாள்தான் என் வாழ்வின் திருநாள் " (வே.பா.நா.ப.117) என்று பறம்பின் தலைவன் கூறுகின்றான். நாவல் எடுத்துரைக்கும் மேற்கண்ட நிகழ்வு பறம்பு நாட்டின் சமநிலைக்கும் , ஆட்சியாளனின் எளிமைக்கும் சான்றாக அமைகின்றது.

**" எல்லோரு மோர்குலம் எல்லாரு மோரினம்**
**எல்லோரு மிந்திய மக்கள்**
**எல்லாரு மோர்நிறை எல்லாரு மோர்விலை**
**எல்லோரும் இன்னாட்டு மன்னர்கள்"4**

என்ற பாரதியின் வரிகளுக்கு எடுத்துக்காட்டாய், பறம்பு நாடு இருந்துள்ளது.

இவ்வாறாக, பறம்பு மக்கள் , அதிகாரமற்ற அன்பு மயமான ஆட்சிமுறையில் , சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவத்தோடு வாழ்ந்துள்ளதை நாவல் மூலமாக அறிய முடிகின்றது.

**மறத்திலும் அறம்:**

தமிழர் தம் வாழ்வியலை அகம் , புறம் என வகுத்தனர். மறம் என்பது புற வாழ்க்கைச் சார்ந்த போர் , வீரம், வெற்றி முதலியவற்றைக் குறிக்கும். வாழ்வியல் நெறிகளை , அறம், பொருள், இன்பம் எனப் பகுத்துக் கூறினர். ஒவ்வொரு மனிதனும் இன்பமாக வாழ விழைகின்றான். அவ்வின்பத்தைத் தருவதான பொருள், அறவழியில் பெற்றதாக இருக்க வேண்டும்.

**"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு"5**

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

அறமானது, பறம்பு மக்களின் ஒவ்வொரு அசைவிலும் ஊடுருவியிருந்தது. இன்பத்தில் மட்டுமல்லாது, கடும் சினங்கொண்டு தாக்கிப் போரிடும்போதுகூட அறநெறியில் வழுவாதவர்களாக பறம்பு மக்கள் திகழ்ந்ததை நாவல் வெளிப்படுத்தும் பின்வரும் நிகழ்வின் மூலம் அறியலாம். "காலம்பனின் அடித்தொடையின் பின்நரம்பு பாரிக்கு வசப்பட்டது. அதில் சுழித்து அடித்தால் சரிவான் அவன். ஆனால் , மற்போரில் அதை செய்யக்கூடாது என மனதைத் திசை மாற்றினான் " (வே.பா.நா.ப.543) என்று நாவல் எடுத்துரைக்கின்றது.

**"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல"6 (கு.எ.39.)**

என்ற குறள் , அறங்களைச் செய்து , பெறுகின்ற இன்பமே இன்பம் ; அறமற்ற பிற வழியில் பொருள் ஈட்டுவதும், இன்பம் துய்ப்பதும் துன்பம் ;; அதனால் பெருமையும் இல்லை என்கின்றது. பறம்பு மக்களின் மறம் , இத்தகைய உயர்பண்பான அறம்சார்ந்து விளங்கியமையால்தான் வரலாற்றின் பக்கங்களில் இன்றளவும் புகழோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

பறம்பு மக்களின் வாழ்க்கை, மலைவாழ் வாழ்க்கை என்பதால் அவர்களின் உணவுமுறை வேட்டைப்பொருள் சார்ந்தே அமைந்திருந்தது. வேட்டையிடுவதை வீரமாகக் கருதினர். அதனையே , முதன்மையாகக் கொண்டு வாழ்ந்தனர். அப்படி வீரமாகக் கருதும் வேட்டையாடுவதிலும் அறத்தைப்

பின்பற்றினர். தங்களின் தேவைக்கு மிகுந்து , ஒரு சிற்றுயிரைக்கூட தாக்காமல் வாழ்ந்துள்ளனர் என்பது, "நமக்கு இவை போதும். அவை சிறிது நேரத்தில் மயக்கம் தெளிந்து நீருக்குள் சென்றுவிடும். அதுவரை பறவைகள் எதுவும் கொத்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள்" (வே.பா.நா.ப.107) என்ற நாவல் வரிகளின் மூலம் தெளிவாகப் புலனாகின்றது.

தமைக்காக்கும் உணவிலும் , தாக்கும் போர்முறையிலும் , அறம் வழுவாத பறம்பு மக்களின் வாழ்க்கைமுறை , அறிவியல் என்று அறவியலை அழித்துக் கொண்டிருக்கும் நமக்குப் பாடமாகத் திகழ்கின்றது.

**மரபுகளைக் காக்கும் மாண்பு:**

தமிழர் தம் வாழ்வியல் நெறிகள் சமூகத்தில் முழுமையும் மகிழ்ச்சியும் அடைய வேண்டுமெனில், ஒவ்வொரு குழுவும் தனக்கென்று சில கட்டமைப்பைக் கையாளுகின்றன. இந்தக் கட்டுப்பாட்டைத் தலைமுறை தலைமுறைகளாகப் பின்பற்றுகின்றபோது மரபாக மையம் கொள்கிறது.

சங்க காலந்தொட்டே , வெற்றித் தெய்வமாக கொற்றவையை வணங்கி குருதி கொடுத்துவிட்டுதான் போர்க்களம் புகுவது வழக்கமாக இருந்தது. அதே வழக்கம் பறம்பு நாட்டிலும் காணப்படுகின்றது. காடறியப் போகும்போதுகூட கொற்றவையை வணங்கிவிட்டுத்தான் சென்றுள்ளனர். "தாய் தெய்வ வழிபாடுதான் எல்லாவற்றிலும் மூத்தது. கொற்றவை ஈன்ற பிள்ளைதானே முருகன்" (வே.பா.நா.ப.439) என்ற வரிகளின் மூலம் கொற்றவை வழிபாடு பறம்பில் பெற்றிருந்த முக்கியத்துவத்தை அறிய முடிகின்றது.

பறம்பில், கொற்றவை விழா பதினேழு நாட்கள் நடைபெற்றுள்ளது. இவ்விழாவில் , மூவேந்தர்களால் அழிக்கப்பட்டு பறம்பில் வசித்த குலங்களின் மிச்சங்கள், ஒவ்வொரு நாளும் தங்களின் குலப்பாடலைப் பாடி, கொற்றவையிடம் சூளுரைத்து வழிபட்டதாக நாவல் கூறுகின்றது. "அவர்களின் போர்த்தெய்வமான கொற்றவையிடம் முறையிட்டு , ஆறாத்துயரைக் கொட்டி வஞ்சினம் உரைக்கும் விழாதான் இது" (வே.பா.நா.ப.142) எனும் நாவலின் வரிகள் கொற்றவை விழாவை விளக்குகின்றது.

**"வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை"7**

என்று சிலப்பதிகாரமும்,

**"வெற்றிவேல் போர்க் கொற்றவை"8**

என்று திருமுகாற்றுப்படையும் , கொற்றவையை, வெற்றியைக் கொடுக்கும் தெய்வமாகக் கருதி வழிபட்டனர் என்பதை எடுத்துரைக்கின்றது.

பண்டைய காலத்தில் வாழ்ந்த இனக்குழுக்கள் தாய்வழிச் சமூகமாகவே அமைந்திருந்தது. பறம்பு நாட்டின் குலச் சமூகத்திலும் பெண்ணிற்குத் தலைமை இடம் தந்துள்ளனர். தலைவன் ஆட்சிப்பொறுப்பில் இருந்தாலும் , குலத்தின் மூதாயான குலநாகினிகளே , பறம்பின் அரணான நாகப்பச்சை வேலியையும் , ஒளிவலையையும் கட்டியாண்டுள்ளதை "அவர்கள்தான் பருவ காலங்களின் தன்மையை அறிந்து , முன்னெச்சரிக்கையுடன் செய்ய வேண்டியவற்றைச் செய்து , இந்த நகரையும் எங்களையும் காத்து வருகிறவர்கள் " (வே.பா.நா.ப.139) என்று நாவலில் வெளிப்படும் பாரியின் கூற்று மூலம் அறிய முடிகின்றது.

ஒவ்வொரு இனக்குழுக்களும் தங்களுக்குக்கென்று சில குல அடையாளங்களாகப்

போற்றிக் காத்தனர். அவற்றைத் தங்களின் குலம் அல்லாதவர்களிடம் பகிர்ந்து கொள்ளக்கூடாது என்ற மரபினையும் பின்பற்றினர். குலத்தின் அடையாளங்களைக் காப்பதே தங்களின் தலையாயக் கடமையாகக் கருதி வாழ்ந்தனர். வேளிர்குலமும், தங்களுக்கே உரித்தான குல அடையாளங்களைப் பிற குலத்தவர்களிடம் பகிர்ந்திடாமல் இருந்துள்ளது. இதனை , "தம் குலம் அல்லாதவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாதவை குலங்களில் நிறைய உண்டல்லவா ?" (வே.பா.நா.ப.394) என்று நாவலில் வெளிப்படும் பாரியின் கூற்று உறுதிப்படுத்துகின்றது.

இவ்வாறாக, இனக்குழு சமூகத்தின் இணையில்லா தெய்வமான கொற்றவையை வழிபடுபவர்களாகவும், குல அடையாளங்களைக் காப்பதே குறிக்கோளாய்க் கொண்ட மாண்புடையவர்களாகவும், பறம்பு மக்கள் வாழ்ந்துள்ளதை நாவல்மூலம் அறிய முடிகின்றது.

**அன்பின் வழியது உயிர்நிலை:**

மனிதநேயம், இரக்கம், பாசம் ஆகியவற்றைக் குறிக்கும் ஒரு நல்லொழுக்கமே அன்பு எனப்படுகிறது. எதையும் எதிர்பாராது துன்பத்தில் துவள்பவருக்கு , பாரபட்சமின்றி உதவுவதே தூய அன்பு. அது பறம்பின் மக்களிடம் கடலளவு கொட்டிக் கிடந்துள்ளது.

"பசித்தவரின் குரலாகப் பாரி மாறியதால் , எல்லா நாட்டுக்குள்ளும் நிறைந்திருந்தான்" (வே.பா.நா.ப.31)என்று நாவலில் வெளிப்படும் கூற்று பாரியின் இரக்கவுள்ளத்தை நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. ஒவ்வொரு இனக்குழுக்களும் மூவேந்தர்களிடமிருந்து தங்கள் குலங்களையே காக்க முடியாமல் போராடிக் கொண்டிருந்தபொழுது , பறம்பு நாடு , மூவேந்தர்களால் அவநிலைக்கு ஆளாக்கப்பட்ட பதினாறு குலங்களின் வழித்தோன்றல்களுக்கு வாழ வழி வகுத்துத்தந்துள்ளது. இதனை , "இந்த மண்ணெங்கும் சிந்தப்பட்ட குருதியும் கண்ணீரும் உலராமல் உனது உள்ளங்கையில் இருக்கின்றன பாரி" (வே.பா.நா.ப.225) என்ற நாவலில் வரும் கபிலரின் கூற்று உறுதிப்படுத்துகின்றது. அலங்காரமும் பாவனைகளும் படியாத அன்பின் தூய வடிவமாகப் பறம்பு திகழ்கின்றது.

**"அன்புஇலார் எல்லாம் தமக்குஉரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு"9 (கு.எ.72.)**

என்ற திருக்குறளுக்கு இலக்கணமாகப், பறம்பு நாடு காட்சியளிக்கின்றது.

"மனதின் ஓரத்தில் இருக்கும் அழுக்கு கூட நம்மை வெட்கித் தலைகுனியச் செய்யும் அளவுக்கு உக்கிரம் ஏறிய பேரன்பு இது. கபிலர் திணறிப்போனார் " (வே.பா.நா.ப.91) என்ற நாவல் வரிகள் பறம்பு மக்களின் அளப்பறியா அன்பினைப் பறை சாற்றுகின்றது.

பேரன்பின் உருவாக வாழ்ந்த பறம்பு மக்களின் வாழ்க்கை , மனிதத்தை மறந்து கொண்டிருக்கும் இயந்திரயுக மனிதர்களுக்குப் பாடமாகத் திகழ்கின்றது.

**முடிவுரை:**

வீரயுக நாயகன் வேள்பாரி நாவல் எடுத்துரைக்கின்ற, பறம்புமலைவாழ் மக்கள் மற்றும் அவர்களை ஆண்ட பாரியின் வாழ்வியல் சிந்தனைகள் இவ்வாய்வின் மூலம் அறிய முடிகிறது. பறம்பு மக்களின் இவ்வாழ்க்கைமுறை, இன்றைய சமூகத்திற்குக் கற்பிதமாக விளங்குகின்றது.

**தொகுப்புரை:**

மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதி பறம்பு மலை. அங்கு வேளிர்குல மக்களோடு , மூவேந்தர்களின் சூழ்ச்சிகளால் தாக்குதலுக்கு ஆளான பதினாறு இனக்குழுக்களைச் சார்ந்த மக்களின் வழித்தோன்றல்களும் வாழ்ந்துள்ளனர். பறம்பு மக்களின் ஆட்சி , அரண், ஆயுதம், மருத்துவம், பொருளாதாரம் ஆகியன இயற்கை சார்ந்து அமைந்துள்ளது. அதிகாரமற்ற ஆட்சியில் , சமத்துவத்தோடும் சுதந்திரத்தேரடும் வாழ்ந்துள்ளனர். பறம்பு நாட்டில் வேட்டையாடுதல் , போரிடுதல் போன்ற மறம்சார் செயல்கள் அறம்சார்ந்து விளங்கியுள்ளன. இனக்குழுச் சமூகத்திற்கு உரித்தான மரபுகளைப் போற்றுதலும், காத்தலும் பறம்பு மக்களிடம் காணப்பட்டன. மனிதநேயம், கருணை, பாசம் என அன்பில் திளைத்தவர்களாகப் பறம்பு மக்கள் விளங்கியுள்ளனர்.

**அடிக்குறிப்புகள்:**

1. தமிழ்ப் பழமொழிகள் (தொகுதி 3), கி.வா.ஜகந்நாதன் (தொ.ஆ), ப.218., இரண்டாம் பதிப்பு 2006, ஜெனரல் ப்ளிஷர்ஸ், 244,ராமகிருஷ்ண மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை - 600004.
2. புறநானுறு மூலமும் உரையும், புலியூர்கேசிகன் (உ.ஆ), பா.எ.158.(1-4)., முதற்பதிப்பு 2010, சாரதா பதிப்பகம், ஜி-4,சாந்தி அடுக்கம், 3,ஸ்ரீகிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை,சென்னை-14.
3. பண்பாட்டு மானி ;டவியல், பக்தவச்சல பாரதி , ப.550., பதிப்பு-2019, அடையாளம் பதிப்பகம் , 1250/1 கருப்பூர் சாலை, புத்தாநத்தம், திருச்சி - 621310.
4. பாரதியார் கவிதைகள், தமிழவேள்.ச.மெய்யப்பன் (ப.ஆ), ப.156., எட்டாம் பதிப்பு 2007, தென்றல் நிலையம், 12பி,மேலசன்னதி, சிதம்பரம் - 608001
5. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை , ந.சுப்புரெட்டியார், ப.442., பழனியப்பா பிரதர்ஸ், மூன்றாம் பதிப்பு-1988,(உ) டாக்டர்.சு.இராமலிங்கம், (யுனு-13,மனை எண்-3354), அண்ணா நகர், சென்னை-640 000
6. திருக்குறள் நயவுரை, தங்க.பழமலை (உ.ஆ), ப.09., ஆறாம் பதிப்பு 2009, அருண்மொழி வெளியீடு, 150,தெற்குத் தெரு, திருக்கோவிலூர் - 605 757
7. சிலப்பதிகாரம் - மூலமும் திறனாய்வும் , ரா.சீனிவாசன்; (உ.ஆ), ப.79., இரண்டாம் பதிப்பு 1998, அணியகம், 5,செல்லம்மாள் தெரு, செனாய் நகர், சென்னை-600 030.
8. திருமுருகாற்றுப்படை உரை , சாமி.சிவஞானம் (ப.ஆ) , பா.வ.258., சரசுவதி மகால் நூலகம் , தஞ்சாவூர் - 613009
9. திருக்குறள் நயவுரை, தங்க.பழமலை (உ.ஆ), ப.16.,ஆறாம் பதிப்பு 2009, அருண்மொழி வெளியீடு, 150,தெற்குத் தெரு, திருக்கோவிலூர்-605 757